RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணன் படைப்புகள்

த. சங்கமித்ரா தனபதி [அ] *

[அ] தமிழ் ஆர்வலர், புதுக்கோட்டை-622003

# Rajam Krishnan's Works

T. Sangamithra Dhanapathi [a, *]

[a] independent Researcher, Pudukkottai-622003

*Corresponding Author:
goshakthi@gmail.com

Received: 16-12-2025
Revised: 28-02-2026
Accepted: 08-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**
She is a veteran female writer from Tamil Nadu. Her works shed light on the subjugation of women and other social ills prevalent during her era. This study demonstrates that the revolutionary ideas articulated in Rajam Krishnan's works remain highly relevant even in contemporary times. We will examine her literary contributions—works that explore the realities of everyday life through direct observation—which brought to the fore the social status of women, their familial responsibilities, and the resurgence of a womanhood that refuses to be confined solely to the domestic sphere.

**Keywords:** Rajam Krishnan, Life, Literary Prowess, Responsibilities

## முன்னுரை

அன்றைய காலகட்டத்தில் ராஜம் கிருஷ்ணன் அவர்கள் முற்போக்குச் சிந்தனையாளராகத் திகழ்ந்தார். பெரிய குடும்பத்தில் இருந்து கொண்டு தனக்கு நேரம் ஒதுக்கிப் படைப்புகளை அளிப்பது என்பது பெரிய விஷயம், அதையும் தாண்டி பெண்களை மையமாகக்கொண்டு அவர்களின் வாழ்க்கை நிலைபாடுகளை எழுத்தின் மூலம் வெளிபடுத்தியுள்ளார். நவீன இலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனையின் வளர்ச்சிக் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உருவாக்கியுள்ளது. அத்தகைய மாற்றம் நிறைந்த படைப்புகள் தான் ராஜம் கிருஷ்ணன் அவர்கள் வழங்கியுள்ளார்கள். ஆணாதிக்கச் சிந்தனைக்கு ஒரு திறவுகோலாக இவர் படைப்புகள் உள்ளன. உள்ளதை உள்ளப்படி சொல்லும் கதைக் களம் தான் இவரின் படைப்புகள் அத்தகைய படைப்புகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## ராஜம் கிருஷ்ணன் வாழ்க்கை

1925-ம் ஆண்டு தமிழகத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள முசிறியில் பிறந்தவர். பள்ளிக்குச் சென்று முறையான கல்வி பயிலாதவர். பெண்கள் பூப்படையும் முன்பே திருமணம் செய்து வைத்துவிடும் அன்றைய சமூக வழக்கப்படி, 15-வயதிலேயே ராஜம் கிருஷ்ணனுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டது. திருமணத்திற்குப் பின்னர் சென்னைக் கிழக்கு தாம்பரத்தில் குடியேறினார். மின் பொறியாளரான கணவரின் உதவியால் பல புத்தகங்களைப் படித்துபின் தானே கதைகளை எழுத ஆரம்பித்தார். கிருஷ்ணனின் உதவிகரம் அவரது திறமைகளுக்கு ஒரு தூண்டுகோலாக இருந்தது. இவர் மிடுக்கும் அழகும், கம்பீரமும் கலந்து தோற்றம் இயல்பாகக் கொண்டவர். இவரின் குடும்பம் பெரிய கூட்டு குடும்பம். ஒன்பது நாத்தனார், மாமனார், மாமியார் கொண்ட குடும்பம், நூலகம் சென்று படித்தும் தம் அறிவை பெருக்கிக் கொண்டார். தென்னிந்திய மொழியையும், ஆங்கில மொழியையும் சுய முயற்சியால் கற்றார். ரஷ்ய மொழியைக் கற்றார். பின்தானே கதைகள் எழுத ஆரம்பித்தார். அவர் கதை எழுத கணவர் ஊக்கம் தந்தார். அதோடு பேனாவிற்கு மைபோடுவது, துணிகளை அயர்ன் பண்ணி சிறுசிறு உதவிகளை தன் மனைவிக்கு செய்தார். 16- வயதில் கதைகளை எழுத ஆரம்பித்தார்.

## எழுத்தாற்றல்

தொடர்ந்து பத்திரிக்கையில் பிரசுரமாகி எழுத்தாளர்கள் வரிசையில் தனக்கு என தனிஇடம் ஏற்படுத்தி கொண்டார். மின் வாரியத்தில் வேலை பார்த்ததால் இந்தியாவின் பல பகுதிகளிலும் வாழ நேரிட்டது. அப்படி வாழ்ந்த போது, அங்குள்ள பண்பாடுகளையும், அரசியல், சமூக சிக்கல்களையும் அழகாக உள்வாங்கிக் கொண்டு அவற்றைத்தன் படைப்புகளில் எதிரொலிக்கச் செய்தார். ஒரு நாவல் எழுத வேண்டுமானால், அவர் தேர்ந்தெடுத்துக் கொண்ட உள்ள அடக்கத்துடன் தொடர்புடைய ஊருக்களுக்கு சென்று, அந்த மக்களுடன் வாழ்ந்து களப்பணியாற்றி எழுதிய முதல் பெண் எழுத்தாளர் இவர்தான்.

## களம் கண்டு எழுதிய நூல்கள்

1. பீகாரில் கொள்ளைகாரர்கள் அராஜகம் செய்துக் கொண்டிருந்த சமயம், அந்த கொள்ளைக் கூட்ட தலைவர் டாகுமாண்சி சந்தித்து பல மாதங்கள் அவர்களுடன் இருந்து பார்த்தவற்றை எழுதிய தான் 'முள்ளும் மலரும்' நாவல்.
2. தீப்பெட்டி தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்கள் மட்டும் குழந்தை தொழிலாளிகள் நிலைக்குறித்த நாவல் 'கூட்டுக்குஞ்சுகள்'.
3. தூத்துக்குடிப் போய் அங்கு வேலைச் செய்யும் உப்பளத் தொழிலாளர்களின் துயரங்களைப் பார்த்து எழுதிய நாவல் தான் 'கரிப்பு மணிகள்' இவை அன்றாட அவர்கள் படும் துயரவாழ்க்கை, கால்களில் கொப்பளங்கள் தோன்றும், அதையும் தாங்கி கஷ்டப்பட்டுதான் உப்பளத்தில் பணி செய்கிறார்கள். அந்த வெண்மை கண்ணே கூசும்படி செய்யும். ராஜம் கிருஷ்ணன் அவர்களுடன் உப்பளத்தில் நடந்து அவருக்கும் காலில் கொப்பளங்கள் உருவாகின. அதைப் பொருட்படுத்தாது, அவர்களுடைய வாழ்க்கை இன்னல்களை சேகரித்து, நூலாக வெளியிட்டார். நாம் வாழ்வில் அன்றாட பயன்டுத்தும் உப்புக்கு, தீப்பெட்டிக்கும் பின்னால் உள்ள கண்ணீர் கதைகள் நம்மை ஆழ்ந்த துயரத்திற்கு கொண்டு சென்றுவிடும்.
4. நீலகிரியில் வாழும் படுவர்களின் வாழ்க்கை விவரித்த எழுதிய நாவல் 'குறிஞ்சித் தேன்' ஆகும்.
5. வேருக்கு நீர், சேற்றில் மனிதர்கள் இரண்டு நூலுமே அமைப்புச்சார, விவசாய தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவதை மையப்படுத்திய நாவல்கள்.
6. மார்க்கீசியப் பார்வை கொண்டு இருந்த ராஜம் கிருஷ்ணன் அவர்கள் உழைக்கும் வர்க்கத்தினை வாழ்க்கை மெய்யான கரிசனத்தோடு பதிவுச் செய்தவர். அரசியல் போராட்டத்தில் பெண்கள் பங்களிப்பை வலியுறுத்தும் நாவல்களை எழுதியவரும் இவர்தான், பெண் விடுதலை போராளியாக வாழ்ந்தவர். காந்திய கொள்கைமீது மதிப்பும், இடதுசாரி கொள்கையின்பால் ஈடுபாடும் கொண்டவர். இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மற்றும் ஜனநாயக சங்க மாநாடுகளின் பங்கேற்று இருக்கிறார். காலந்தோறும் பெண், காலந்தோறும் பெண்ணினம், பெண் விடுதலை, இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, யாதுமாகி நின்றாய் போன்ற ஆழமான கட்டுரை நூல்கள் பலவற்றை எழுதி உள்ளார். தமது சிறுகதைகள் மற்றும் நாவல்களிலும் அந்த கருத்தை பதிவு செய்திருக்கிறார்.
7. 1953-ல் வெளிவந்த அவருடைய முதல் நாவலான 'பெண் குரலில்' கூட்டுக்குடும்ப வாழ்வில் ஒரு பெண் அனுபவிக்கும் மன அழுத்தத்தைப் பதிவு செய்து இருக்கிறார். வேலைக்கு செல்லும் பெண்களின் சிக்கலைப் பேசும் விலங்குகள், ஓசைகள் அடங்கிய பிறகு, பெண் சிசு கொலைப் பற்றிய உசுலம்பட்டி பின்னணிக் கொண்ட 'மண்ணகத்து பூ துளிகள்' தேவதாசி முறையிலிருந்து விடுபட எண்ணி அதிலிருந்து வெளிவந்து தனக்கென ஒரு வாழ்வை அமைத்து கொள்ளும் பெண்ணைப் பற்றி பேசும் 'மானுடத்தின் மகரந்தகள்' இதிகாச மது ஆக்கமாகச் சீதையின் வாழ்க்கை மீட்டு உருவாக்கிய நாவல் 'வனதேவியின் மைந்தர்கள்' தன் 50 வயதில் வீட்டை விட்டு வெளியேற முடிவெடுக்கும் நடுத்தரத்து வர்த்தகப் பெண்ணியத்தின் அக, புற போராட்ங்களைப் பதிவுச் செய்த 'வீடு' நாவல். இதற்கு முன்னுரை தேவையில்லை என நினைக்கிறேன் என்று ராஜம் கிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார். இதுபோன்ற பெண் சார்ந்த படைப்புகளைப் பட்டியல் இட்டுக் கொண்டே போகலாம்.
8. டாக்டர் ரெங்கச்சாரி மற்றும் பாஞ்சாலி சபதம் எழுதிய பாரதியார் வாழ்க்கை வரலாறு நூல்களை எழுதியுள்ளார். தமிழ் இலக்கியத்தின் பல களங்களிலும், தமிழ்சமூகத்தின் பல தளங்களிலும், அழுத்தமாக தம் கருத்தை பதிவுச் செய்துள்ளார். பல்வேறு பாராட்டுகளையும், விருதுகளையும் பெற்றவர் ராஜம் கிருஷ்ணன்.

## விருதுகள்

1. 1950- நியூயார்க் ஹெரால்ட் ட்ரைப்யூன் சர்வதேச விருது
2. 1953- கலைமகள் விருது (நாவல் - பெண் குரல்)
3. 1973- சாகித்ய அகாடமி விருது (நாவல் - வேருக்கு நீர்)

4. 1975- சோவியத் லாண்ட் நேரு விருது

கதை நாவல்கள்- அலைகடலிலே அல்லி, உயிர்ப்பு, ஊசியும் உணர்வும், சிவப்பு ரோஜா நித்திய மல்லிகை, பச்சைகொடி, மலைரோஜா, புதிய கீதம், புதிய சிறகுகள், புயலின் மையம், மாணிக்க கங்கை வளைக்கரம், கோபுர பொம்மைகள், சத்திய வேள்வி, சுழலில் மிதக்கும் தீபங்கள், சலனங்கள், தங்கமுள், தோட்டக்காரி, சோலைக்கிளி, போராளி, மணலூர் மணியம்மை வரலாறு, பாலுவின் காதலன், அன்னையர் பூமி, அன்புகடல், 89- வயதில் 80 நூல்களை படைத்த சாதனை பெண்மணி அவரின் தீவிர ரசிகை சில நூல்கள் படிக்கவில்லை.

## எளிமையானவர்

எளிமை, வாழ்க்கையின் பெரும்பகுதியைத் தொலைபேசி இல்லாமலே கடந்தவர். எங்கு சென்றாலும் பேருந்து, இரயில் பயணம் மேற்கொண்டார். ஒருமுறை தூர்தர்ஷன் இண்டர்வியூக்கு ஒப்புக்கொண்டு, வரும்போது அவர் எழுதிய நூல்களையும், விருதுகளையும் கொண்டு வரச் சொன்னதன் காரணமாக அத்தனையும் சுமந்து சென்றவர். அவருக்கு பக்க துணையாக இருந்த கணவர் பக்க வாதத்தால் பாதிக்கப்பட்டு, 2002ல் காலமானார். குழந்தை இல்லை, வீடு, பணம் இவையெல்லாம் உறவும் நட்புகளும் பகிர்ந்து கொண்டனர். குடிசையில் வாழ்ந்தார். சகலத்தையும் இழந்து, முதுமையில் வறுமையால் வாடினார். பிறகு முதியோர் இல்லத்தில் வாழ்ந்தார். விபத்தால் கால்முறிவு ஏற்பட்டு, பின் உடல் நல குறைவு காரணமாக போரூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார், இறுதி ஆண்டுகளில், தான் எழுதிய அனுபவ தொகுப்பான 'காலம்' என்ற நூலில் தன்னிடம் நட்போடு கவனித்த செவிலியர், உட்பட அவரது நன்மதிப்பு பழுதுபடாமல் பார்த்துக்கொண்ட ஆளுமைகளை எழுதிவைத்தார். தனது 89-வயதில் அக்டோபர் 20ம் தேதி 2014-ம் ஆண்டு திங்கள் இரவு காலமானார். ஸ்ரீராமசந்திர மருத்துவமனைக்கு தானமாக தன் உடலை அளிக்க விருப்பத்தைத் தெரிவித்தார். இவரது நூல்கள் இவர் உயிருடன் இருக்கும் போதே அரசு உடைமையாக்கப்பட்டன. இதற்கான ரூ.3 லட்சம் வழங்கப்பட்டது. முதன் முறையாக உயிருடன் இருக்கும்போதே அரசு உடைமை ஆக்கப்பட்ட இவரது நூல்களே.

## முடிவுரை

இவர் மறைந்தாலும், காலம் உள்ளவரை இவரின் எழுத்துகள் எல்லோர் மனதிலும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கும். இவர் ஓர் முன்னோடி எழுத்தாளராகவும், பெண்களின் இடர்பாடுகளை நீக்கிய ஒளி விளக்காகத் திகழ்ந்தவர். இவருடைய புகழ் எங்கும் என்றென்றும் நிலைத்து இருக்கும்.

## References

தோதாத்ரி. எஸ், ராஜம் கிருஷ்ணன் இந்திய இலக்கியச் சிற்பிகள், சாகித்திய அகாடெமி, முதல் பதிப்பு.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License